சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப.,

ந.க.21883/2026/அ6 **நாள். 28-07-2026**

பொருள் **உள்ளூர் விடுமுறை** – சேலம் மாவட்டம் – சங்ககிரி வட்டம் – சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாளான தமிழ் மாதம் ஆடி 18-ம் நாளினை (03.08.2026) முன்னிட்டும் மற்றும் ஆடி 18 ஆடிப்பெருக்கு விழாவினை முன்னிட்டும் உள்ளூர் விடுமுறையாக அறிவித்து – உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.575, பொது(பல்வகை)த் துறை நாள். 31.07.2018
2. வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி அவர்களின் கடித எண் ந.க.2927/2025(சி) நாள்: 17.07.2026.

******

உத்தரவு :

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சுதந்திர போராட்ட வீரர், தீரன் சின்னமலை அவர்களின் 221-ஆம் ஆண்டு நினைவு நாளான தமிழ்மாதம் ஆடி 18-ஆம் நாளை முன்னிட்டும் மற்றும் ஆடி 18 ஆடிப்பெருக்கு விழாவினை முன்னிட்டும் தமிழ்மாதம் ஆடி 18-ஆம் நாள் 03.08.2026 (திங்கட்கிழமை) அன்று சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிக்கல்லூரிகளுக்கு பார்வை 1-ல் காணும் அரசு ஆணையின்படி உள்ளூர் விடுமுறையாக அறிவித்து உத்தரவிடப்படுகிறது.

மேற்படி உள்ளூர் விடுமுறை, செலாவணி முறிச்சட்டம் 1881 (Negotiable Instrument Act 1881)-ன் கீழ் வராது என்பதால், அரசின் பாதுகாப்புக்கான மற்றும் அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு மாவட்டத்திலுள்ள, மாவட்ட மற்றும் சார்நிலை கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும்.

மேலும் உள்ளூர் விடுமுறைக்கு பதிலாக, சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிக்கல்லூரிகளுக்கு 22/08/2026 ஆம் தேதி சனிக்கிழமை அன்று பணி நாளாக அறிவித்து உத்தரவிடப்படுகிறது.

ELAMBAHAVATH K
மாவட்ட ஆட்சித்தலைவர்,
சேலம்.

பெறுநர்

1. அனைத்து துறைத்தலைவர்கள், சேலம் மாவட்டம்,
2. பதிவாளர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் மாவட்டம்,
3. முதன்மை கல்வி அலுவலர், சேலம் மாவட்டம்.
4. முதன்மை நிர்வாக அலுவலர், ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றம், சேலம்.

SCAN AnyScanner

நகல்

1. அரசு செயலாளர், பொது (பல்வகை)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
2. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சேலம் (உள்ளூர் நாளேடுகளில் விளம்பரம் செய்ய).
3. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சேலம்.
4. மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), சேலம்.
5. அனைத்து பிரிவு தலைவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம்.

Digitally signed by
Elambahavath K
Date: 28-07-2026
12:11:39

AnyScanner